உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

• 4 பக்கங்கள் • விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 26.05.2026 • மலர் 04 • இதழ்: 146
• Edition : Nagercoil • 26.05.2026 • Vol : 04 • Issue : 146 • Page : 4 • Rs. 5/-

"ஜனநாயகம் வென்றது" :

# ஃபால்டா மறு தேர்தலில் பாஜக வெற்றி

## பிரதமர் நரேந்திர மோடி கருத்து

கொல்கத்தா, மே. 26

"மேற்கு வங்கத்தின் ஃபால்டா சட்டப்பேரவை தொகுதிக்கான மறுதேர்தலில் ஜனநாயகம் வென்றது" என்று பாஜக வெற்றி குறித்து பிரதமர் நரேந்திர மோடி கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், "ஃபால்டா மக்கள் தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளனர். ஜனநாயகம் வெற்றி பெற்றுள்ளது, அச்சுறுத்தல் தோல்வியடைந்துள்ளது. ஃபால்டாவில் முன்னெப்போதும் இல்லாத அளவிலான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தேபாங்ஷு பாண்டியாவுக்கு எனது வாழ்த்துகள்.

மேற்கு வங்க மக்கள் பாரதிய ஜனதா கட்சியின் மீது வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கைக்கு இது ஒரு சான்றாகும். மேற்கு வங்க அரசு பல்வேறு துறைகளில் மேற்கொண்டு வரும் சிறப்பான பணிகளை மக்கள் நேரடியாகக் கண்டு வருகின்றனர்; அதனால்தான் அவர்கள் மீண்டும் ஒருமுறை நமக்குத் தங்கள் ஆசியை வழங்கியுள்ளனர். மேற்கு வங்கத்தை சேர்ந்த அனைத்து பாரதிய ஜனதா கட்சித் தொண்டர்களும் ஆற்றியுள்ள சிறப்பான பணிகளுக்காக அவர்களுக்கு எனது வாழ்த்துகள். எதிர்காலத்திலும், மேற்கு வங்கத்தின் வளர்ச்சிக்காக நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம்" எனத் தெரிவித்துள்ளார்.

ஃபால்டா மறுதேர்தல்: மேற்கு வங்கத்தில் உள்ள 294 தொகுதிகளுக்கும் கடந்த ஏப்.23, 29ம் தேதிகளில் இரு கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றது. 29ம் தேதி ஃபால்டா தொகுதியில் வாக்குப்பதிவின்போது முறைகேடுகள் நடந்ததாக புகார்கள் எழுந்தன.



இதை ஆய்வு செய்த தேர்தல் ஆணையம், ஃபால்டா தொகுதியின் 285 வாக்குச் சாவடிகளிலும் மே 21ம் தேதி மறுதேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்தது.

இதர 293 தொகுதிகளுக்கான முடிவுகள் கடந்த 4ம் தேதி வெளியிடப்பட்டன. இதில் பாஜக 207 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. பாஜக மூத்த தலைவர் சுவேந்து அதிகாரி 9ம் தேதி முதல்வராகப் பதவியேற்றார். இந்த சூழலில், தேர்தல் போட்டியில் இருந்து விலகுவதாக ஃபால்டா தொகுதியின் திரிணமூல் காங்கிரஸ் வேட்பாளர் ஜஹாங்கீர் கான் கடந்த 19ம் தேதி அறிவித்தார்.

ஏற்கெனவே அறிவித்தபடி ஃபால்டா தொகுதியில் கடந்த 21ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. 86.71 சதவீத வாக்குகள் பதிவாகின. வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றது. ஆரம்பம் முதலே பாஜக வேட்பாளர் தேபாங்ஷு பாண்டா முன்னிலையில் இருந்தார். இறுதியில் 1,49,666 வாக்குகள் பெற்று அவர் வெற்றி பெற்றார்.

மார்க்சிஸ்ட் வேட்பாளர் சாம்பு நாத் குர்மிக்கு 40,645 வாக்குகள் கிடைத்தன. காங்கிரஸ் வேட்பாளர் அப்துர்ரசாக் மொல்லா 10,084 வாக்குகளைப் பெற்றார். போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்த திரிணமூல் வேட்பாளர் ஜஹாங்கீர் கானுக்கு 7,783 வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. ஃபால்டா தொகுதியில் 1,09,021 வாக்குகள் வித்தியாசத்தில் பாஜக வேட்பாளர் தேபாங்ஷு பாண்டா அபார வெற்றியைப் பெற்றிருக்கிறார்.

# திட்டமிட்டபடி ஜூன்1ல் பள்ளிகள் திறக்கப்படுமா?

## அமைச்சர் ராஜ்மோகன் பதில்



சென்னை, மே. 26

சென்னையில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது திட்டமிட்டபடி ஜூன்1ல் பள்ளிகள் திறக்கப்படுமா? என செய்தியாளர்கள் அவரிடம் கேள்வியெழுப்பினர். இதற்கு பதிலளித்து அவர் பேசியதாவது;

"தமிழகத்தில் கோடை விடுமுறை முடிந்து ஜூன்1 ந்தேதி பள்ளிகள் திறக்கப்படும் என முன்னதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் கடுமையான வெயில் காரணமாக பள்ளிகள் திறப்பை தள்ளி வைக்க வேண்டும் என சில கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பில் இருந்து கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

ஜூன் முதல் வாரத்தில் வெப்ப அலை இருக்குமா? அல்லது பருவமழை தொடங்குமா? என வானிலை துறையிடம் தகவல் கேட்டுள்ளோம். வானிலை அறிவிப்பு வெளியான பிறகு பள்ளிகள் திறப்பு குறித்து முதல் அமைச்சர் விஜய்யிடம் ஆலோசிக்கப்படும்.

அதன் பின்னர் பள்ளி திறப்பு தேதி அறிவிக்கப்படும். பள்ளிகளில் காலை உணவு, மதிய உணவு திட்டங்கள் வழக்கம்போல தொடரும்."

இவ்வாறு அவர் கூறினார்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, 7 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 51 ஆயிரத்து 650 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் வழங்கினார். உடன், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் .பா.முகுந்தன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் .முருகேசன், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. சௌமியா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை என்பது உண்மைதான்: எச்.ராஜா பேச்சு

சென்னை, மே. 26

தமிழக பாஜக மூத்த தலைவர் எச்.ராஜா வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

திமுக ஆட்சியில் நடந்தது போல் தினந்தோறும் படுகொலைகளும், பாலியல் வன்கொடுமைகளும் தவெக ஆட்சியிலும் நாள்தோறும் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன.

ஆட்சி மாறிய பிறகும் ஒவ்வொரு நாளும் தமிழகத்தில் படுகொலைகளும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குற்றங்களும் தொடர் நிகழ்வுகளாகவே இருப்பது மக்கள் அனைவரையும் அதிர்ச்சியிலும், அச்சத்திலும், விரக்தியிலும் ஆழ்த்தி இருக்கின்றது.

போதைப்பொருள் பரவலாக்கலே குற்ற சம்பவங்கள் அனைத்திற்கும் அடிப்படை காரணமாக விளங்குகிறது.

சட்டம் ஒழுங்கையும், காவல்துறை நிர்வாகத்தையும் தனது நேரடி கண்காணிப்பில் வைத்திருக்கிற தமிழக முதல்வர் ஜோசப் விஜய் தமிழகத்தில் குற்றங்களை அறவே ஒழித்து அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைவிடுத்து திமுகவுக்கு போட்டியே தவெக தான் என சொல்லிக்கொண்டு...

திமுக ஆட்சியின் நீட்சியாகவே தவெக ஆட்சியும் இருக்கின்றது என்பது தான் உண்மை என மக்கள் பேசத்தொடங்கி இருக்கிறார்கள்.

திமுக போலவே தவெகவும் மக்கள் நலனில் அக்கறை சிறிதுமின்றி இருப்பதாகவே நாள்தோறும் நிகழ்ந்தேறும் அவலங்கள் அதை உறுதி செய்வது போலவே உண்மை நிலையை மக்களுக்கு உணர்த்துகின்றன.

திமுக ஆட்சியில் சீரழித்ததை விட தவெக ஆட்சியில் தமிழகம் மோசமாக சீரழிந்து கொண்டிருக்கிறது என்கிற நிலை உருவாகி வருவதாக தமிழக மக்கள் வேதனையோடு விமர்சிக்கத் தொடங்கி இருக்கின்றனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நாகர்கோவில், மே.26

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 339 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பூங்கோதை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் சுகிதா (பொது), பத்மபிரியா (கூடுதல் நேர்முக உதவியாளர் நிலம்), துணை காவல் கண்காணிப்பாளர் ஜெயசந்திரன், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



# தஞ்சாவூர் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தஞ்சாவூர் மே 26

தஞ்சாவூர் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் இலவச வீட்டு மனை பட்டா ,முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 545 மணிக்கு பொது மக்கள் கலெக்டரிடம் வழங்கினார்கள்இந்தமனுக்கள்மீதுஉரியநடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர் களுக்கு மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டார் அதனைத் தொடர்ந்து பொது மக்கள் தீர்க்கும் நாள் கூட்டத்தில் தஞ்சாவூர் மாவட்டம் மானோஜிப்பட்டியைச் சேர்ந்த மாற்றுத் திறனா ளி சந்திரா காதொலிக் கருவி வேண்டி மனுவினை விண்ணப்பி த்ததை, தொடர்ந்து மாவட்ட கலெக்டர் உடனடியாக காதொலிக் கருவி வழங்கினார்.

"15 நாட்களில் 25 கொலைகள், 19 பாலியல் குற்றங்கள்

# என்ன செய்யப் போகிறீர்கள் முதல்வரே?" உதயநிதி

சென்னை, மே. 26

"தமிழ்நாட்டில் கடந்த 15 நாட்களில் 25 கொலைகள், 4 இரட்டைக் கொலைகள், 19 பாலியல் குற்றங்கள் நடந்துள்ளது. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களை தடுக்க, முதல்வர் ஆக்கப்பூர்வமாகஎன்னசெய்யப்போகிறார் என்ற கேள்விக்கு அவர் நேரடியாக பதில் சொல்லி ஆக வேண்டும்" என சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,"தமிழகத்தில்கடந்த15நாட்களில் 25கொலைகள், 4இரட்டைக்கொலைகள், 19 பாலியல் குற்றங்கள் என செய்திகளில் வந்த சம்பவங்கள் மட்டுமே இவை. மாற்றம், மாற்றம் என்று சொன்னவர்களின் ஆட்சியில்,தமிழ்நாட்டின்சட்டம்ஒழுங்கு மாறி இருப்பதற்கு இந்த சம்பவங்களே சாட்சி.



கோவை சூலூர் சிறுமிக்கு நடந்த கொடுமையின் அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் விழுப்புரம் மாவட்டத்தில் மற்றொரு சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை நடந்திருக்கிறது. சூலூர் சிறுமியின் தாய்க்குச் சொல்லாமல் அவசரகதியில் உடல் எரிக்கப்பட்டிருக்கிறது. மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அருகே சிறுவன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

காவிரி என்பது ஒரு மாநிலத்தின் சொத்து அல்ல

# இரு மாநில மக்களின் வாழ்வாதார நதி: செல்வப்பெருந்தகை கருத்து

சென்னை, மே. 26

காவிரி ஆற்றின் குறுக்கே புதிய அணைகளை கட்ட கர்நாடக அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில், கர்நாடக காங்கிரஸ் அரசை தமிழ்நாடு காங்கிரஸ் கண்டிக்க வேண்டும் என்று திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி. வலியுறுத்தி இருந்தார்.

இந்த நிலையில் தமிழர்களின் நீர்வள உரிமைக்காக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி என்றும் உறுதியாக குரல் கொடுக்கும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

காவிரி ஆற்றில் புதிய அணைகள் கட்ட முயலும் கர்நாடக அரசின் செயல் கடும் கண்டனத்திற்குரியது. ஏற்கனவே தண்ணீர் பற்றாக்குறையால் தவித்து வரும் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை முற்றிலும் பாதிக்கும் இந்த முயற்சி, தமிழக மக்களின் உரிமையை பறிக்கும் செயலாகும்.



காவிரி என்பது ஒரு மாநிலத்தின் சொத்து அல்ல, இரு மாநில மக்களின் வாழ்வாதார நதி. சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புகளை யும், காவிரி மேலாண்மை ஆணையத்தின் நடைமுறைகளையும் மீறி ஒருதலைப்பட்சமாக அணை கட்ட முயல்வது கூட்டாட்சி தத்துவத்திற்கே எதிரானது.

தமிழகத்தின் உரிமையை பாதுகாக்க மத்திய அரசு உடனடியாக தலையிட்டு கர்நாடக அரசின் இந்த முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும். தமிழர்களின் நீர்வள உரிமைக்காக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி என்றும் உறுதியாக குரல் கொடுக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# தமிழ்நாட்டில் புதிய அணைகள் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஈரோடு சமூக ஆர்வலர் முதல் அமைச்சருக்கு மனு



ஈரோடு மே 26

ஈரோட்டை சேர்ந்த சமூக நல ஆர்வலர் மற்றும், வழக்கறிஞரான செந்தில் குமார் தமிழக முதல்வர் விஜய்க்கு ஒரு மனு அனுப்பி உள்ளார். அதில் கூறி யிருப்பதாவது

பெருந்தலைவர் காமராஜர் ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட அணைகள் தமிழக விவசாய வளர்ச்சிக்கும் குடிநீர் பாதுகாப்புக்கும் மிகப் பெரிய ஆதாரமாக இருந்து வருகிறது. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக புதிய பெரிய அணைகள் அமைப்பதில் போதிய முன்னேற்றம் இல்லாததால், தற்போது தமிழகத்தில் குடிநீர் மற்றும் விவசாய நீர்ப்பாசன தேவைகளுக்காக அண்டை மாநிலங்களை நம்ப வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

ஊட்டி, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் மற்றும் பல இயற்கை வளமிக்க இடங்களில் புதிய அணைகள் அமைக்க தகுந்த வாய்ப்புகள் இருப்பதாக நிபுணர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தொடர்ந்து கருத்து தெரிவித்து வருகின்றனர். எனவே, தமிழகத்தில் புதிய அணைகள் அமைக்க ஏற்ற இடங்களை ஆய்வு செய்ய உயர்மட்ட நீர்வள மற்றும் பொறியியல் நிபுணர் குழுவை அரசு உடனடியாக அமைக்க வேண்டும் .

தங்களின் ஆட்சி காலத்தில் குறைந்தபட்சம் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட புதிய அணைகள் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

இதன் மூலம்நிலத்தடி நீர் வளம் உயரும். விவசாய நீர்ப்பாசனம் மேம்படும், குடிநீர் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் , மழைநீர் சேமிப்பு அதிகரிக்கும் தமிழகத்தின்நீர்வளம்நீண்டகாலத்திற்கு பாதுகாக்கப்படும் . மேலும், டாஸ்மாக் மதுபான கொள்முதல் முறையில் முழுமையான வெளிப்படைத்தன்மை கொண்டு வர ஒப்பன் டெண்டர் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் மூலம் அரசின் செலவுகள் குறைவதுடன், முறைகேடுகள் மற்றும் கள்ளச்சந்தை நடவடிக்கைகளும் குறையும். சேமிக்கப்படும் அரசுப் பணத்தை ஏழை மக்களின் கல்வி, மருத்துவம் மற்றும் நலத்திட்டங்களுக்கு பயன்படுத்த முடியும். தமிழகத்தின் வளர்ச்சிக்கும், விவசாயிகளின் எதிர்கால பாதுகாப்பிற்கும் பயன்படும் இந்த கோரிக்கைகளை தாங்கள் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.




# கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் 19 ஆவது பட்டமளிப்பு விழா

கோவை மே 26

கோவை,கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரியின் 19ஆவது பட்டமளிப்பு கல்லூரி வளாகத்தில் உள்ள முனைவர் மாரப்ப கவுண்டர் ஆறுச்சாமி கலையரங்கில் நடைபெற்றது.இவ்விழாவில் திருவாரூர்,தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் எம். கிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பட்டதாரிகளுக்குப் பட்டங்களை வழங்கிப் பட்டமளிப்பு விழாசிறப்புரையாற்றினார்.பின்பு அவர் கூறுகையில் ஒவ்வொருவரும் உயர்கல்வி பயின்று பட்டம் பெறுவதற்கு முதல் காரணம் அவர்களது பெற்றோர்கள் என்றும் பெற்றோர்கள் தங்களது உறக்கம்,மகிழ்ச்சி ஆகியவற்றைத் தியாகம் செய்து தங்களது பிள்ளைகளை முன்னேறச் செய்கின்றனர் என்றும் அத்தகைய பெற்றோர்களைத் தெய்வமாகக் கருதி வணங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

உயர்கல்வி என்பது அதனைப் படித்து முடித்தவரின் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கானது மட்டுமல்ல அது சமுதாயத்தைக் காப்பதற்கானது என்பதைப் பட்டதாரிகள் உணரவேண்டும் என்றார். உயர்கல்வியில் செய்யப்படும் ஆராய்ச்சியின் விளைவுகளான புதிய கண்டுபிடிப்புகள் நாட்டின் கடைக்கோடியில் உள்ள குடிமகன் வரை சென்று சேரும்போது தான் அந்த உயர்கல்வி முழுமையான பயனைத் தருவதாக அமையும் என்றும் கடின உழைப்பு,தனித்திறன்,ஒழுக்கம்,நேர்மை ஆகிய நற்பண்புகள்தான் ஒருவரை முன்னேற்றும்என்றும் பட்டதாரிகளிடம் குறிப்பிட்டார்.

முன்னதாகக் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் டாக்டர் சி.ஏ. வாசுகி தலைமையுரையாற்றினார். பின்பு அவர் கூறுகையில்வளமான நாடு என்பது அங்குள்ள இயற்கை வளம் மற்றும் செல்வ வளம் ஆகியவற்றை மட்டும் அடிப்படையாகக்கொண்டதல்ல.அங்குவாழும் மக்களின் அறிவு,பண்பாடு ஆகியவையும் வளமானதாக இருந்தால்தான் அது வளம்பொருந்திய நாடு என்றும் உண்மையான வெற்றி என்பது உயர்கல்வி கற்று ஊதியம் குவிப்பது மட்டுமல்ல சிறந்து உருவாக்குவது என்றும் குறிப்பிட்டார்.

பட்டமளிப்பு விழா நிகழ்வைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் வே. சங்கீதா தொடங்கி வைத்தார்.

இப்பட்டமளிப்பு விழாவில் இளநிலை மற்றும் முதுநிலைத் தேர்வுகளில் தரவரிசைப் பெற்ற பட்டதாரிகளுக்கு முதலில் பட்டங்கள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இளநிலை பட்டதாரிகள் 1068 பேருக்கும் முதுநிலை பட்டதாரிகள் 235 பேருக்கும் முதுநிலை பட்டயப் படிப்பை நிறைவு செய்த 29 பேருக்கும் சிறப்பு விருந்தினர் பட்டங்களை வழங்கினார்.



# கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை அமைச்சர் சம்பத் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்

கோவை மே:26

2026 சட்டமன்ற தேர்தலில் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று காங்கிரஸ்,கம்யூனிஸ்ட்,விசிக மற்றும் இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சிகளுடன் ஆட்சியமைத்து தற்போது அமைச்சரவை முழுமையாக விரிவு படுத்தபட்டுள்ளது.இன்னிலையில் தமிழகம் முழுவதும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்கள் புதுப்பிக்கபட்டு திறக்கபட்டு வருகிறது.இதன் ஒரு பகுதியாக இந்நிலையில் கோவை கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் புதுப்பிக்கபட்ட அலுவலக திறப்பு விழா நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ரிப்பன் வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார்.மேலும் கோவை கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி சந்தோஷ சட்டமன்ற உறுப்பினர் நாற்காலியில் அமர வைத்து வாழ்த்து தெரிவித்தார் அமைச்சர் சம்பத்.

திருச்சி

# தவெக கட்சியினரை ஆய்வு செய்ய சொன்ன அமைச்சர்



திருச்சி, மே. 26

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் நேற்று திருச்சி திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி கோவிலில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, தன் கட்சியினரை கோயில்களில் உள்ள பிரசாத கடைகளில் ஆய்வு செய்யுமாறு அறிவுறுத்தினார். காலாவதி தேதி சரிபார்க்க வேண்டும் என்றும், நேரடியாக கடைக்குள் செல்லாமல் அனுமதி பெற்று விசாரிக்க வேண்டும் என்றும் கூறினார். மேலும், கோவில் அதிகாரிகளிடம் படம் பிடித்து அனுப்ப சொல்லலாம் என்றும் தெரிவித்தார்.



மணப்பாறை அருகே

# காரை சேதப்படுத்திய 8 பேர் கைது

மணப்பாறை, மே. 26

மதுரை அழகர் நகரைச் சேர்ந்த சுரேஷ், உறவினர் கணேச முருகனுடன் காரில் மணப்பாறை அருகே கலிங்கப்பட்டிக்குச்சென்றபோது, எட்டு மர்மநபர்கள் காரை மறித்து, இருவரையும் தாக்கி, காரை கல்லால் அடித்து சேதப்படுத்தியுள்ளனர். இது குறித்து சுரேஷ் அளித்த தகவலின் பேரில், மர்மநபர்கள் எட்டு பேரையும் மணப்பாறை காவல் நிலைய போலீசார் கைதுசெய்துவிசாரணைமேற்கொண்டுவருகின்றனர்.

திருச்சி

# எஸ்பியாக டொங்குரோ பிரவீன் உமேஷ் நியமனம்



திருச்சி, மே. 26

தமிழக அரசு பல்வேறு ஐபிஎஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, திருச்சி மாவட்ட எஸ்பி செல்வ நாகரத்தினம் மாற்றப்பட்டு, அவருக்கு பதிலாக டோங்ரே பிரவீன் உமேஷ் திருச்சி மாவட்ட காவல்கண்காணிப்பாளராகநியமிக்கப்பட்டு ள்ளார். இந்த இடமாற்ற ங்கள் நிர்வாக நலன் கருதி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிகிறது.

திருச்சியில்

# அரசு பாலிடெக்னிக் சேர்க்கை அறிவிப்பு



திருச்சி, மே. 26

திருச்சி மாவட்டம் சேதுராப்பட்டியில் உள்ள அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் 202627 ஆம் கல்வி ஆண்டிற்கான டிப்ளமோ முதலாம் ஆண்டு மற்றும் நேரடி இரண்டாம் ஆண்டு மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. மேலும், இதர பாடப்பிரிவுகளுக்கான மாணவர் சேர்க்கையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் கல்லூரி இணையதளம் மூலமாகவோ அல்லது நேரடியாக கல்லூரிக்குவந்துவிண்ணப்பிக்கலாம்எனஆட்சியர் சரவணன் தெரிவித்துள்ளார்.

# நாகர்கோவில் வலம்புரிவிளை உரக் கிடங்கை மாற்ற வேண்டும்; முதலமைச்சருக்கு அகில இந்திய தமிழர் கழகம் கோரிக்கை



நாகர்கோவில்: மே 26

நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட வலம்புரிவிளை உரக் கிடங்கை இடமாற்றம் செய்வது தொடர்பாக முதலமைச்சருக்கு அகில இந்திய தமிழர்கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் கோரிக்கை மனு அனுப்பியுள்ளார்.

அதில்கூறியிருப்பதாவது:

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சியின் முக்கிய பகுதியான பீச் ரோடு சந்திப்பு அருகே வலம்புரிவிளை உரக் கிடங்கு சுமார் 14 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட 52 வார்டுகளிலிருந்தும் தினந்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகள் அனைத்தும் இங்கேயே கொட்டப் படுகின்றன. சுத்திகரிப்பு நிலையம் இருந்தாலும், அந்த பகுதியில் 24 மணி நேரமும் துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது. அடிக்கடி அந்த இடத்தில் தீப்பற்றி கொள்வதும் உண்டு. இந்த உரக்கிடங்கைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான குடியிருப்புகளில் வசித்து வரும் மக்கள் மூச்சுத் திணறலுடன் பலவிதமான நோய்களுக்கும் உட்பட்டு வருகிறார்கள் .

இப்பகுதியில் மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், வியபார நிறுவனங்கள், கோயில்கள் உள்ளன. இந்த உரக்கிடங்கை மாற்றுவதற்கு 25 ஆண்டுகளுக்கு மேலாக அப்பகுதி மக்கள் பல்வேறுபோராட்டங்கள்நடத்திவந்தாலும், இதுவரையிலும் குப்பைக்கிடங்கை மாற்றுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளவில்லை. எனவே தாங்கள் வலம்புரிவிளை உரக் கிடங்கை புறநகர் பகுதியில் மாற்றிட உரிய நடவடிக்கையை தாங்கள் மேற்கொள்ள வேண்டும்." இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.



# பொங்கல் பண்டிகைக்கு தரமான இலவச வேட்டி சேலை வழங்கப்படும்

## அமைச்சர் விஜய் பாலாஜி தகவல்

ஈரோடு மே 26

ஈரோடு பவானி ரோட்டில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலையில் கைத்தறித்துறை அமைச்சர் விஜய பாலாஜி ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது பள்ளி சீருடைக்காக மொத்தம் ஒரு கோடியே முப்பத்தி ஒன்பது லட்சம் மீட்டர் துணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அதில் ஒரு கோடியே 30 லட்சம் மீட்டர் துணி வரப்பெற்று ஒரு கோடியே 10 லட்சம் மீட்டர் துணி சீருடைகளாக மாற்றி பள்ளி கல்வித்துறைக்கு 4 கட்டங்களாக அனுப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள துணிகளை சீருடையாக உற்பத்தி செய்யும் பணி இந்த மாதிரி இறுதியில் நிறைவு பெறும் . பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வழங்கும் விலையில்லா வேட்டி சேலைகள்

உற்பத்தி திட்டத்திற்கான அ சாணை முதல்அமைச்சர் விஜய்யிடம் ஒப்புதல் பெற்று மிக விரைவில் வெளியிடப்படும். மேலும், கடந்த ஆண்டு வேட்டி சேலை உற்பத்தியில் நிகழ்ந்த தவறுகள் இந்தமுறைநடைபெறாது. இந்த ஆண்டு தரமான வேட்டி சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு ரேஷன் கார்டுதாரர்களுக்கு வழங்கப்படும்.

கைத்தறி மற்றும் விசைத்தறிகளுக்கான இலவச மின்சார உயர்வு உள்ளிட்ட தேர்தல் வாக்குறுதிகள் குறித்து முதல் அமைச்சர் விஜய் ஆலோசனை செய்து அதற்கான அறிவிப்பை விரைவில் வெளியிடுவார். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆய்வின் போது ஆனந்த் மோகன் எம்.எல்.ஏ. ஆலையின் செயலாட்சியார் சிவகுமார், துணை இயக்குனர் சரவணன் மற்றும் மாவட்ட இணை செயலாளர் அக்கிம் மாவட்ட துணை செயலாளர் பிரகாஷ் மாவட்ட பொருளாளர் தளபதி முருகேசன் தொண்டர் அணி அமைப்பாளர் ராஜு உள்பட பலர் கலந்து கொண்டனர்.



இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட

# மணக்குடி மீனவர்களை மீட்க மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி மணக்குடி மீனவ கிராம மக்கள் மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

கன்னியாகுமரி, மே. 26

கன்னியாகுமரி மாவட்டம் மணக்குடி மீனவ கிராமத்தை சேர்ந்த மீனவர்கள் அலெக்ஸ், அந்தோணி ராஜன், ஆல்பிரட், அருள் பிரிட்டோ, ஜானு, அலெக்ஸ் இவர்கள் ஆறு பேரும் ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பகுதியில் தங்கி படகில் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். இவர்கள் ஆறு பேரும் மண்டபம் கடற்கரையில் இருந்து கடந்த 10ம் தேதி நாட்டுப்படகில் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். 11 ம் தேதி காலை கரை திரும்ப வேண்டிய நிலையில், படகு பழுதானதால் கரை திரும்பவில்லை. மீனவர்கள் கரை திரும்பாததால் அவர்களை சக மீனவர்கள் படகில் சென்று கடலில் தேடினர்அவர்களுக்கு உதவியாக இந்திய கடற்படையை வீரர்களும் கடலில் தேடினர். இந்த நிலையில் எல்லையோரம் இருந்த இலங்கை கடற்படையினர் இங்கு யாரும் வரவில்லை என தமிழக மீனவர்களை திருப்பி அனுப்பி உள்ளனர். இதனடையே மாயமான மீனவர்கள் படகு பழுதான நிலையில் கடல் நீரோட்டத்தால் இலங்கை பகுதிக்குள் சென்றுள்ளனர். அவர்களை இலங்கை கடற்படையினர், சர்வதேச எல்லையை தாண்டி இலங்கை பகுதிக்குள் சென்றதாக ஆறு மீனவர்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர். மீனவர்கள் கைது செய்யப்பட்ட தகவல் அறிந்ததும் கன்னியாகுமரி மாவட்டம் மணக்குடி மீனவர்களின் குடும்பத்தினர் கவலை அடைந்தனர். தங்கள் மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்க செல்லவில்லை எனவும் ராமநாதபுரம் பகுதியில் இருந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த போது படகில் எந்திரம் பழுதானதால் காற்றில் படகு இழுத்துச் செல்லப்பட்டனர். மீனவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இலங்கை அரசு திரும்ப அனுப்ப மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து, தாயகம் அழைத்து வருவதோடு அவர்களது படகு மற்றும் படகில் காணப்பட்ட உபகரணங்களை பத்திரமாக மீட்டு தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் மத்திய மாநில அரசுகள் இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விடுவிக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறி மணக்குடி மீனவ கிராம மக்கள் மணக்குடி தபால் நிலையம் முன்பு மீனவர்களை விடுவிக்க கோரி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்குத்தந்தை உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட மீனவ கிராம பெண்கள் கலந்து கொண்டு மத்திய மாநில அரசுகளுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

# அனுபவம் இல்லாத தமிழக முதல்வர் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும்

## கன்னியாகுமரியில் தமிழிசை பேட்டி



கன்னியாகுமரி,மே.26

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் புதுவை முன்னாள் ஆளுநரும் பாஜக மூத்த தலைவருமான தமிழிசை சௌந்தரராஜன் நேற்று சாமி தரிசனம் செய்தார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழகத்தில் இப்போதுதான் புதிய ஆட்சி வந்திருக்கு, இரண்டு வாரம் என்பது குறுகிய காலம் கிடையாது. சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை ஆரம்பத்திலேயே இரும்புக்கரம் கொண்டு அடக்கியிருக்க வேண்டும். கோயம்புத்தூரில் 11 வயது சிறுமிக்கு நடந்த விவகாரம் மிகவும் வருத்தத்தக்க ஒன்று. தீர்ப்புகள் மாறினாலும், தமிழகத்தில் பெண்களுக்கான நிலைமை மாறாமல் இருப்பது கவலை அளிக்கிறது. முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் அனைவரும் சட்டம் ஒழுங்கு பிரச்சனையைத் தீவிரமாக அலசி ஆராய்ந்து, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

'நாங்கள் இப்பதான் ஆட்சிக்கு வந்திருக்கிறோம், கால அவகாசம் வேண்டும்' என்று சொல்ல முடியாது. நாம் பேசிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் கூட, விழுப்புரத்திற்கு அருகே 11 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். ஒவ்வொரு உயிரும், ஒவ்வொரு குழந்தையும் காவு கொடுக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.

தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்புக்கென 5 ஆயிரத்து 300 காவல்துறை அதிகாரிகளும், குழந்தைகள் பாதுகாப்புக்கு மட்டுமே ஆயிரத்து 635 அதிகாரிகளும் உள்ளனர். 224 மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன. 'சிங்கப்பெண் படை' உருவாக்கப்படும் என்றும் கூறப்பட்டது. ஆனால், இந்த அமைப்புகள் எல்லாம் எந்த அளவுக்குத் தீவிரமாகச் செயல்படுகின்றன என்பது தெரியவில்லை. இது வெறும் கூடுதல் அதிகார அமைப்பாக மட்டுமே நீடிக்கக் கூடாது."

இம்முறை தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத் தமிழகத்தில் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றாலும், வருங்காலத்தில் நிச்சயம் கிடைக்கும். 2029 மற்றும் 2031 ஆகிய ஆண்டுகள் நிச்சயமாக பாஜகவிற்கான காலமாக இருக்கும்."

முன்னாள் ஆளுநர் மற்றும் மாநிலத் தலைவர் என்ற முறையில் எனக்குச் சட்டமன்ற பதவியேற்பு விழாவிற்கு அழைப்பு வந்தது. அதனால் நான் சென்றிருந்தேன். தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் அவர்கள் அங்கு வந்திருந்த அனைத்துத் தலைவர்களையும் பார்த்தார், எங்களை மட்டும் நேரில் பார்க்கவில்லை என்பது அவரது விருப்பம். ஆனால், எல்லோரையும் பார்த்தவர், அனைத்து அலுவலகங்களுக்கும் சென்றவர், பாஜக அலுவலகத்திற்கும் வந்திருக்க வேண்டும். அரசியல் தலைவர்கள் பாரபட்சம் பார்க்கக் கூடாது.

தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள அனுபவம் இல்லாத புதியவர், தமிழ்நாட்டின் பிரச்சனைகளை விரைவாக முன்னெடுத்துச் செல்வதற்கு அனைத்துக் கட்சித் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். அனுபவம் இல்லாதவர்கள், அனுபவம் உள்ளவர்களிடம் ஆலோசனை கேட்பதில் தவறில்லை என்பது எனது கருத்து."

"திமுக பாஜக கூட்டணி என்பது வெறும் யூகங்கள் மட்டுமே. பாஜகவைப் பொறுத்தவரை தெளிவான அரசியல் நடை போட இருக்கிறது. எங்களை யாரும் காங்கிரஸ் போல முதுகுக்குப் பின்னால் குத்த முடியாது. காங்கிரஸ் கட்சியினர் அழைப்பதற்கு முன்னரே போய் ஒட்டிக்கொள்பவர்கள், ஆனால் பாஜக அப்படி அல்ல.

இந்தத் தேர்தல் முடிவுகள் ஒரு சுனாமி போல அடித்துச் சென்றுள்ளது. இதில் முதலமைச்சரே தோற்றுப் போகும்போது, இந்தத் தேர்தலை ஒரு கணக்காகவே நாம் எடுத்துக்கொள்ள முடியாது. நிச்சயமாக வருங்காலத்தில் கூட்டம் கூட்டமாகத் தமிழகத்தில் தாமரை மலரும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை." இவ்வாறு அவர் கூறினார். இதில் பாஜக மாவட்ட தலைவர் கோபகுமார், செயலாளர் சுபாஷ், கிழக்கு மாவட்ட பாஜக ஊடகப் பிரிவு செயலாளர் குமரி சிவா மற்றும் பாஜக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயிலில்

# 1.5 கிலோ தங்க நகைகள் கொள்ளையடித்த 5 பேர் கைது

## மேலும் ஒருவருக்கு வலைவீச்சு



நாகர்கோவில், மே. 26

கேரள மாநிலம் திருச்சூரை சேர்ந்தவர் ஜோஸ். நகை வியாபாரியான இவர் கடந்த 16ஆம் தேதி குருவாயூரிலிருந்து சென்னை சென்ற குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயிலில் முன்பகுதி செய்யாத பயணிகளுக்கான பொதுப் பெட்டியில் பயணம் செய்தார். அந்த ரயில் குமரி மாவட்டம் குழித்துறை ரயில் நிலையத்தை வந்தடைந்த போது தனது பையில் வைத்திருந்த ஒன்றரை கிலோ தங்க நகைகள் திருடப்பட்டு இருப்பதைக் கண்டு ஜோஸ் அதிர்ச்சி அடைந்தார்.

இது குறித்த அவர் உடனடியாக குழித்துறை ரயில்வே போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

இந்த கொள்ள சம்பவம் குறித்து விசாரிக்க ரயில்வே இன்ஸ்பெக்டர் செல்வி தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது. கொள்ளையில் ஈடுபட்ட நபர்களை பிடிக்க தனிப்படை போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அவர்களை கண்டுபிடிப்பதற்காக குழித்துறை மற்றும் திருச்சூர் ரயில் நிலையப் பகுதியில் இருந்த சிசிடிவி கேமரா காட்சிகளை சேகரித்து, விரிவான ஆய்வு மேற்கொண்டனர்.

இதில் திருச்சூர் ரயில் நிலைய சிசிடிவி கேமரா காட்சியில் ஜோசை ஒரு மர்ம கும்பல் பின் தொடர்ந்து வந்தது துல்லியமாக தெரிந்தது. அதனைவைத்து அவர்கள் அடையாளம் காணப்பட்டனர். போலீசார் நடத்திய விசாரணையில் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டது கேரளாவை சேர்ந்த கும்பல் என்பது உறுதியானது. மேலும் அவர்களின் செல்போன் என்னையும் போலீசார் கண்டுபிடித்தனர். கொள்ளையர்கள் செல்போன் எண்களின் டவர் லொகேஷன் வைத்து போலீசார் கேரளா விரைந்தனர். தொடர்ந்து தனிப்படை போலீசார் திருச்சூர் பகுதியை சேர்ந்த அபுதாஹிர், டோலி, கோபகுமார், சர் புதின், சித்திக் ஆகிய 5 பேரை அதிரடியாக கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 35 பவுன் தங்க நகைகள் மற்றும் ரூ 2 லட்சத்து 33 ஆயிரம் ரொக்கப்பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. பின்னர் கைது செய்யப்பட்ட 5 பேரும் நாகர்கோவில் ரயில்வே போலீஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் இந்த சம்பவத்தில் முக்கிய குற்றவாளி ஒருவர் தலைமறைவாக இருப்பது தெரியவந்துள்ளது. அவரை கைது செய்யவும் அவரிடம் இருந்து மீதமுள்ள நகைகளை மீட்கவும் தனிப்படை போலீசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைக்கு பிறகு கைது செய்யப்பட்ட 5 பேரையும் போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். ஓடும் ரயிலில் தங்க நகைகளை திருடி சென்ற கொள்ளை கும்பலை நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் சிசிடிவி கேமரா கட்சியின் உதவியோடு விரைந்து கைது செய்த ரயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் செல்வி தலைமையிலான தனிப்படை போலீசாரை உயரதிகாரிகள் பாராட்டினர்.



## திருப்பூரில்

# ஜனநாயக சமநீதி மக்கள் கழக ஆலோசனைக் கூட்டம்

திருப்பூர்:மே,26

திருப்பூரில் ஜனநாயக சமநீதி மக்கள் கழக ஆலோசனைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது

ஜனநாயக சமநீதி மக்கள் கழகம் சார்பில் திருப்பூரில் ஆலோசனைக் கூட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக வளர்ச்சி, உறுப்பினர் சேர்க்கை, மக்கள் நலப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாவட்ட செயலாளராக சுரேந்தர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட செயலாளராக மைதீன் ஆகியோரின் பொறுப்புகள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

மேலும், கழக நிர்வாகிகள் மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த தொண்டர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

கூட்டத்தின் முடிவில் கழக வளர்ச்சிக்காக அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட உறுதி எடுத்துக்கொண்டனர்.

## ஆம்பூர் கே.ஏ.ஆர். பாலிடெக்னிக் கல்லூரியில் படித்த

# முன்னாள் மாணவர்கள் 21 ஆண்டுகளுக்கு பின் சந்திப்பு

## ஒருவருக்கொருவர் தங்களது அன்பை பரிமாறிக் கொண்டனர்



ஆம்பூர்மே,26

கடந்த 1997 ஆம் ஆண்டு முதல் ஆம்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற மாணாக்கர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி மிகச் சிறப்பானதொரு தொழில்நுட்ப கல்வியினை வழங்கும் வகையில் சோலூரில் இயங்கி வரும் கே.ஏ.ஆர். பாலிடெக்னிக் கல்லூரியில் 2005 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளில் டிப்ளமோ முடித்த முன்னாள் மாணவர்களின் சந்திப்பு கல்லூரியில் உள்ள கே அமீனூர் ரஹ்மான் உள் அரங்கில் நடைபெற்றது. இதில் 21 ஆண்டுகள் கழித்து 2005 ஆம் ஆண்டில் டிப்ளமோ முடித்த மாணவ மாணவியர்கள் டிப்ளமோ இன் கம்ப்யூட்டர் டெக்னாலஜி(DCT), டிப்ளமோ இன் ஃபுட்வேர் டெக்னாலஜி(DFT), டிப்ளமோ இன் லெதர் டெக்னாலஜி(DFT), டிப்ளமோ இன் என்விரான்மென்டல் இன்ஜினியரிங் அண்ட் பொல்யூஷன் கண்ட்ரோல் இன்ஜினியரிங்(DEPCE) மற்றும் டிப்ளமோ இன் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங்(DECE) உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த 200 க்கும் மேற்பட்டோர் தங்களது குடும்ப உறுப்பினர்களுடன் ஒன்றிணைந்து கல்லூரியில் தாங்கள் படிக்கும் காலங்களில் நடந்த நிகழ்வுகளையும் அனுபவங்களையும் நினைவுபடுத்தி கலந்துரையாடி மகிழ்வதுடன் தற்பொழுது தங்களுடைய வாழ்க்கையில் தொழில்நுட்பக்கல்வி எந்த அளவிற்கு மாபெரும் மாற்றத்தையும் மற்றும் முக்கிய பங்காற்றியது என்பதை பற்றியும் அனைவரும் விளக்கி பேசி உங்களது அன்பை பரிமாறிக் கொண்டனர்

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் ஜனாப் கே சாகித் மன்சூர் சாஹிப் சிறப்பு விருந்தினராகவும் தலைமை ஏற்றும் விழாவில் சிறப்புரை ஆற்றினார். மேலும் கல்லூரியின் முதல்வர் முனைவர் த.ராஜமன்னன் முன்னிலை வகித்து சந்திப்பின் முக்கியத்துவத்தை பற்றியும் பின்னால் வரக்கூடிய தலைமுறையினருக்கு வழிகாட்டுதல்களை பற்றியும் வேலைவாய்ப்பு மற்றும் மாணவர்கள் சேர்க்கையின் முக்கியத்துவத்தை பற்றியும் விளக்கி கூறினார். மேலும் இந்த சந்திப்பின் நினைவாக குழு புகைப்படம் எடுத்தல், தாங்கள் படித்த வகுப்பறை மற்றும் ஆய்வகங்களுக்கு சென்று பார்வையிடுதல் போன்ற உணர்வு பூர்வமான நிகழ்வுகளும் நடைபெற்றது. பள்ளிக்கல்வியை முடித்தவுடன் மிக குறுகிய காலகட்டத்தில் பல்வேறு தொழிற்சாலைகளிலும் தொழில் நிறுவனங்களிலும் பணிபுரிய உறுதுணை புரிகின்ற இது போன்ற தொழில்நுட்ப பாடப்பிரிவுகளைநடத்திவரும்கே.ஏ.ஆர். பாலிடெக்னிக் கல்லூரியானது தொடர்ந்து இது போன்ற நிகழ்ச்சிகளை மிகுந்த ஆர்வத்துடனும் அக்கறையுடனும் நடத்தி வருகின்றது. இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் கல்லூரிக்கும் முன்னாள் மாணவர்களுக்கும் இடையேயான நல்லுறவு தொடர்ந்து நீடிப்பதற்கும் தற்போது கல்விப்பயிலும் மாணவர்களுக்கான வழிகாட்டுதலுக்கும் மிகச்சிறந்ததொரு வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கும் ஏதுவாக அமையும் என்பதிலே எந்தவித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. இது போன்ற நிகழ்ச்சிகள் மாணாக்கர்களின் வாழ்க்கையிலே மிகப் பெரிய சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் மேலும் சாதிப்பதற்கு உறுதுணையாகவும் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னை 116 (பி) வட்டம் தவெக சார்பில் 200 பேருக்கு அன்பு விருந்து



சென்னை, மே 26

சென்னை மத்திய தெற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 116 (பி) வட்ட தமிழக வெற்றி கழகம் சார்பாக மாண்புமிகு தளபதி விஜய் முதலமைச்சராக பதவியேற்பை கொண்டாடடும் விதமாக திருவல்லிக்கேணி பஸ் நிறுத்தம் அருகில் 200 பேருக்கு அன்பு விருந்து வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியல் சிறப்பு அழைப்பாளராக சென்னை மத்திய தெற்கு மாவட்ட செயலாளர் ஆர். திலீப் குமார் கலந்து கொண்டார். திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் பி.கௌதம் சுந்தர், 116 (பி) வட்ட கழக நிர்வாகி சி.டிபார்த்தசாரதி முன்னிலையிலும்

தவெகவின் செயல்வீரர்கள் ஏ.ராஜசேகர், எஸ்.பிரகாஷ், ஆர்.மோகன் ஆகியோரின் ஏற்பாட்டிலும் நடைபெற்ற அன்பு விருந்து நிகழ்ச்சியில் கார்த்திக், மணிகண்டன், ராஜசேகர், குமரன், முக்கேஷ், விஜி, ஹேமாத்திரி, சத்யா, துரை, சந்திரசேகர், அஸ்வினி, ஆர்.வர்ஷன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## துறையூர் அருகே

# மணல் கடத்தல் இருவர் கைது



திருச்சி, மே. 26

துறையூர் அருகே கீரம்பூர் செங்கச்சி குட்டையில் மணல் கடத்தல் நடைபெறுவதாக கிராம நிர்வாக அலுவலர் ராமகிருஷ்ணன் அளித்த தகவலின் பேரில், போலீசார் சம்பவ இடத்திற்குச் சென்றனர். அங்கு மணல் கடத்தலில் ஈடுபட்ட மணப்பாறையைச் சேர்ந்தகண்ணன் மற்றும் சிவப்பிரகாசம் ஆகிய இருவரை கைது செய்தனர். மேலும், 3 யூனிட் மணலுடன் கூடிய டிப்பர் லாரியையும் போலீசார் பறிமுதல் செய்தனர்.

## திருச்சி

# குழந்தைகள் உதவி மையத்தில் வேலை வாய்ப்பு: கலெக்டர் தகவல்

திருச்சி, மே. 26

திருச்சி மாவட்ட குழந்தைகள் உதவி மையத்தில் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் மேற்பார்வையாளர் பணியிடங்கள் ஒரு வருட தற்காலிக அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர், https//trichyrapalli.nic.in இணையதளத்தில் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, வரும் ஜூன் 6ம் தேதிக்குள் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என ஆட்சியர் சரவணன் தெரிவித்துள்ளார்.

## லால்குடி அருகே

# கார் மோதி பைக்கில் சென்றவர் பலி

திருச்சி, மே. 26

லால்குடி அருகே நஞ்சை சங்கேந்தி பகுதியைச் சேர்ந்த நந்தகுமார் (22) கடந்த 22ஆம் தேதி இருசக்கர வாகனத்தில் கீழ அன்பில் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, எதிரே வந்த கார் மோதி தூக்கி வீசப்பட்டதில் பலத்த காயமடைந்தார். திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்று இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இது குறித்து வழக்கு பதிவு செய்த லால்குடி போலீசார், விபத்தை ஏற்படுத்திய கார் ஓட்டுநரிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



## சூசையாபுரம் பகுதியில் உள்ள

# தீண்டாமை சுவற்றை உடனே அகற்ற வேண்டும்

## கலெக்டர் அலுவலகத்தில் பா.ம.க. மனு

திருப்பூர், மே. 26:

திருப்பூர் மாவட்ட கலெக்டா் அலுவலகத்தில் நேற்று பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இதற்குகலெக்டா் மனிஷ்தலைமை தாங்கினார். அவரிடம் பாட்டாளி மக்கள் கட்சியின் மாநில பொருளாளா் சையத் மன்சூர் உசேன் மற்றும் நிர்வாகிகள் ஒரு மனு கொடுத்தனா்.

அந்த மனுவில் அவா்கள் கூறியிருப்பதாவது:

திருப்பூர் மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட 36வது வார்டு சூசையாபுரம் (ஜெய்வாபாய் பள்ளி ரோடு) மற்றும் 37 வது வார்டை சோ்ந்த (ராயபுரம் மெயின்ரோடு நஞ்சப்பா பள்ளி சாலை) ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையிலான 2 பிரதான சாலைகள் தனிநபா்களின் ஆதாயத்திற்காக தீண்டாமை சுவா் எழுப்பி அடைத்து வைக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக பாதைகளாக இருந்தவை. இந்த சுவரின் காரணமாக தாழ்த்தப்பட்ட அருந்ததியா் மற்றும் ஆதிதிராவிடா் மக்கள் குடியிருக்கும் சூசையாபுரம் பகுதியில் இருந்து ராயபுரத்தில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு நேராக செல்ல வேண்டிய இந்த பாதை சுவரின் காரணமாக, பள்ளி மாணவ மாணவிகள் 500 மீட்டா் சுற்றி செல்ல வேண்டியுள்ளது. எனவே இந்த தீண்டாமை சுவற்றை அகற்ற வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் பொது மக்கள் சார்பில் உண்ணாவிரதம் மற்றும் மறியல் உள்ளிட்ட போராட்டங்களை நடத்துவோம். என்றனா்.

இதில் மாநில இளைஞரணி செயலாளா் விஜயகுமார், தெற்கு மாவட்ட செயலாளா் மணிகண்ணன், வடக்கு மாவட்ட செயலாளா் சரவணன் மற்றும் நிர்வாகிகள் கண்ணன், காளியப்பன், மயில்சாமி, சுதாகா் உள்பட பலா் கலந்துகொண்டனா்.

# பழுதடைந்த சாலையை சரி செய்து தார் சாலை அமைத்து தரவேண்டும்

## தோவாளை வட்டார காங்கிரஸ் தலைவர் கோரிக்கை மனு



பூதப்பாண்டி மே 26

பூதப்பாண்டி வட்டார வளர்ச்சி அலுவலரை இந்திய தேசிய காங்கிரஸ் தோவாளை வட்டார காங்கிரஸ் (மேற்கு) தலைவர் நாஞ்சில்.M.செல்வராஜ் சந்தித்து காட்டுப்புதூர் ஊராட்சி சிஎஸ்ஐ சர்ச் முதல் செட்டிபனை இறக்கம் வரைகாற்றாடிவிளை பேருந்து திரும்பும் இடத்திலிருந்து மேற்கு சுடுகாடு வரை பழுதடைந்த சாலையை சரிசெய்து தார் சாலை அமைத்து தர கேட்டு மனு ஒன்றை அழித்தார். அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது :

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், காட்டுப்புதூர்ஊராட்சிக்கு உட்பட்ட சிஎஸ்ஐ தேவாலயம் முதல் செட்டிபனை இறக்கம் வரையும், காற்றாடிவிளை பேருந்து திரும்பும் இடத்திலிருந்து மேற்கு சுடுகாடு வரை சாலைகள் பழுதடைந்து பொதுமக்கள் செல்வதற்கும், இருசக்கர, மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் செல்ல முடியாமல் சாலை பழுதடைந்து குண்டும் குழியுமாக, மோசமான நிலையில் உள்ளது. மேலும் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் தற்போது பள்ளி கல்லூரி கோடைகால விடுமுறை முடிந்து ஜூன் மாதத்தில் பள்ளி கல்லூரிகள் திறப்பதால் இவ்வழியே மாணவ மாணவிகள் செல்வதற்கு இடையூறாகவும் உள்ளதால் தாங்கள் பார்வையிட்டு பழுதடைந்த சாலையை சரி செய்து தர வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.



### தருமபுரி அருகே

# 108 வயதான மூதாட்டிக்கு பிறந்த நாள் கேக் வெட்டி கொண்டாட்டம்

தருமபுரி மே 26

தருமபுரி மாவட்டம் பாளையம்புதூர் அடுத்த சுப்புரு செட்டி நகர் பகுதியை சேர்ந்த காலான்புட்டியம்மாள் தம்பதிக்கு இரண்டு மகன்கள் மற்றும் நான்கு மகள்கள் உள்ளனர். காலான் உயிரிழந்த நிலையில் புட்டியம்மாள் வீட்டில் தனிமையாக வசித்து வருகிறார். தனது கணவர் இருந்த காலத்தில் கட்டப்பட்ட வீரபத்திரன் சாமி கோயிலைபராமரித்துவருகிறார். 108வயதானநிலையில் யாருடைய உதவியும் இல்லாமல், தனது பணிகளை தானே செய்து கொண்டு, உடல் ஆரோக்கியத்தோடு வாழ்ந்து வருகிறார். கடந்த ஆறு ஆண்டுகளாக உணவு உண்பதை நிறுத்திவிட்டு, பால், தண்ணீர் மட்டுமே உட்கொண்டு வாழ்ந்து வருகிறார். இந்த நிலையில் 108 வயதான மூதாட்டி புட்டியம்மாளுக்கு இன்று மகன்கள், மகள்கள் மற்றும் பேரக் குழந்தைகள் ஒன்றிணைந்து வீரபத்திரன் சுவாமி கோயிலில் கனகாபிஷேகம் செய்தனர். இதனைத் தொடர்ந்து சந்ததியில் இருக்கும் பெரியவர்கள், சிறியவர்கள் அனைவரும் மூதாட்டி காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார்கள். தொடர்ந்து 108 வது பிறந்த நாளை கேக் வெட்டி கொண்டாடினர். மேலும் 108 ஆவது பிறந்தநாளை ஒட்டி மூதாட்டிக்கு மூக்கு குத்தி, தோடு, மூக்குத்தி, நெக்லஸ் உள்ளிட்ட தங்க நகைகளை அணிவித்து மகிழ்ந்தனர். மேலும் 108 வயதான மூதாட்டிக்கு தனது குடும்பத்தினர் கனகாபிஷேகம் செய்து கேக் வெட்டி கொண்டாடிய சம்பவம் அந்த பகுதியைச் சேர்ந்த பொதுமக்களை மகிழ்ச்சி அடைய செய்தது.



### குமரியில்

# 483 மாணவ மாணவிகளின் கல்வியை மீண்டும் தொடரச் செய்த போலீசின் நிமிர் குழு பாராட்டு விழா

## எஸ் பி பங்கேற்பு

நாகர்கோவில், மே. 26

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் கடந்த ஆண்டு ஏப்ரல் 25 ஆம் தேதி நிமிர் என்ற போக்சோ விழிப்புணர்வு மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு இயக்கத்தை தொடங்கி வைத்தார். போக்சோ குற்றங்கள் இல்லாத, குழந்தைகள் பாதுகாப்பாக வளரக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்தை உருவாக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட இந்த முயற்சி, பல்வேறு சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அடையாளம் கண்டு தொடர்ந்து கண்காணித்து வழிகாட்டி வருகிறது.

இதில் குறிப்பாக, பெற்றோர் இல்லாத குழந்தைகள், ஒரு பெற்றோர் மட்டுமே உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள், போதைப் பழக்கத்திற்கு ஆளான குழந்தைகள், குடும்ப மற்றும் பொருளாதார சிக்கல்களால் பள்ளிப்படிப்பை கைவிட்ட மாணவர்கள், செல்போன் பயன்பாட்டிற்கு அடிமையான குழந்தைகள், ஆன்லைன் விளையாட்டுகளுக்கு அடிமையான மாணவர்கள் போன்ற பல்வேறு அபாய சூழ்நிலைகளில் இருந்த குழந்தைகள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட்டது.

அதன் விளைவாக, பள்ளிக்குச் செல்லாமல் இருந்த 483 மாணவ மாணவிகள் மீண்டும் கல்வியுடன் இணைக்கப்பட்டு, அவர்களின் பள்ளிப்படிப்பு தொடர இந்த நிமிர் குழு உறுதி செய்தது. மேலும், பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திய நிலையில் இருந்த மாணவர்களில், நிமிர் குழுவின் தொடர் வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்பின் மூலம் மீண்டும் கல்வியை தொடர்ந்த 172 மாணவ மாணவிகள், தற்போது நடைபெற்ற 10ஆம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் சிறந்த மதிப்பெண்களுடன் வெற்றி பெற்றுள்ளனர்.

கல்வியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளின் ஒன்று கூடல் நிகழ்ச்சி நேற்று (25.05.2026) கன்னியாகுமரி மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் நடைபெற்றது.

காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளையும், நிமிர் குழுவில் பணியாற்றிய போலீசாரையும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நேரில் சந்தித்து பாராட்டினார். மேலும், மாணவர்களின் உயர்கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் எதிர்கால முன்னேற்றத்திற்குத் தேவையான முழுமையான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும் என உறுதியளித்தார்.

இந்நிகழ்ச்சியில், இந்த சமூக மாற்ற முயற்சியில் சிறப்பான பங்களிப்பை ஆற்றிய நிமிர் குழுவின் மேற்பார்வையாளர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலசுப்பிரமணியன், ஆய்வாளர் கோமதி மற்றும் 15 பெண் காவல்துறையினர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் பாராட்டப்பட்டு சிறப்பிக்க ப்பட்டனர். விழாவில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கியராஜ், இந்து கல்லூரி முன்னாள் முதல்வர் சிதம்பரதாணு, மற்றும் ரெட் அகாடமி நிறுவனர் ஆஸ்டின் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களை ஊக்குவித்ததுடன், பன்னிரண்டாம் வகுப்பிற்கு பின் உள்ள உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர்.

குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் பாதுகாப்பை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டு வரும் கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையின் இந்த முயற்சி, பொதுமக்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.

# மோதிரமலை பகுதியில் பாலம் கட்டும் பணிகள்: மாவட்ட ஆட்சியர் ஆய்வு



நாகர்கோவில், மே.26

கடையால் பேரூராட்சிக்குட்பட்ட மோதிரமலை கோலிஞ்சிமடம் பகுதியில் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.88 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் ஓடை குறுக்கு பாலம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து அவர் கூறுகையில்:

மலைக்கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மழைக்காலங்களில் போக்குவரத்து பாதிக்கப்படாத வகையில் இந்தப் பாலப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. கட்டுமானப் பணிகளின் தரம் மற்றும் தற்போதைய நிலை குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. பணிகளை எவ்வித தொய்வுமின்றி, தரமாகவும், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள்ளும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. என கலெக்டர் கூறினார்.

### மணப்பாறையில்

# லஞ்சம் பெற்ற விஏஓ பணியிடை நீக்கம்



திருச்சி, மே. 26

திருச்சி மாவட்டம் மணப்பாறை அடுத்த புத்தாநத்தம் கிராம நிர்வாக அலுவலர் சரவணன், மணல் வியாபாரியிடம் மணல் அள்ள லஞ்சம் பெற்ற வீடியோ வெளியானது. இதனையடுத்து, ஸ்ரீரங்கம் கோட்டாட்சியர், சரவணனை தற்காலிக பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார். இந்த சம்பவம் இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.



### வடவள்ளி

# திருவாளர்கள் வேளாளர் பிள்ளை அறக்கட்டளையுடன் இணைந்த வேளாளர் பிள்ளை நல சங்கம் துவக்க விழா நிகழ்ச்சி

கோவை மே:26

கோவை வடவள்ளி முதல் மருதமலை சாலையில் உள்ள சித்தி விநாயகர் திருக்கோவிலில், வடவள்ளி திருவாளர்கள் வேளாளர் பிள்ளை அறக்கட்டளையுடன் இணைந்த வடவள்ளி வேளாளர் பிள்ளை நல சங்கம் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இச்சங்கத்தின் துவக்கவிழாவை முன்னிட்டு சங்கத்தின் பொருப்பாளர்கள் நியமிக்க பட்டனர். தொடர்ந்து சங்கத்தின் கொள்கைகள் கோட்பாடுகள் குறித்து எடுத்துரைக்க பட்டது.

விழாவில் கௌரவ தலைவர் ஜெகநாதன் முன்னிலையில், சங்கத்தின் நிறுவன தலைவர் சிவ தேசிகன் வேளாளர் பிள்ளை மற்றும் லேனா லட்சுமணன் பிள்ளை ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்து பேசினார் அப்பொழுது அவர் கூறியதாவது, துவக்கவிழாவில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார். இந்த சங்கம் என்பது நீண்ட நாள் கனவு, இன்று தான் நிறைவேறி உள்ளது என்றார். வேளாளர் பிள்ளை சமூகத்தில் பின் தங்கி உள்ள குழந்தைகளுக்கு கல்வி அறக்கட்டளை மூலமாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்த உள்ளதாக கூறினார். இதற்காகவே இந்த சங்கத்தை உருவாக்கி உள்ளதாக கூறினார்.

சமூக முன்னேற்றம் என்பது ஒன்று படுவதன் மூலமாகவே கிடைக்கும் என்பதை இச்சங்கம் அனைவருக்கும் உணர்த்தும் என்று தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக லண்டன் முருகேசன் பிள்ளை, லேனா லட்சுமணன் பிள்ளை, ஓய்வு பெற்ற தமிழ்நாடு அரசு பள்ளி கல்வி இயக்குனர் சங்கர் பிள்ளை, யோகா கலை நிபுணர் கீதா, பேராசிரியர் செந்தில் குமார் ஆலோசகர்கள், வெள்ளிங்கிரி, தலைவர் லோகநாதன், துணைத்தலைவர் வெங்கிடு சாமி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேனி மாவட்ட கலெக்டர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தேனி, மே. 26

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக த்தில் (25.05.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 355 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சி த்தலைவர் ரஞ்ஜீத் சிங், பொதுமக்களி டமிருந்து பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 355 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்நலத்துறையின்சார்பில்ரூ.1,12,000/ மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களை 20 சிறுபான்மையினர் மகளிர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கி னார் இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி.) கவிதா, உதவி ஆணையர் (கலால்) பஞ்சாபகேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சுரேஷ் குமார், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பாலக்கோடு பேரூராட்சி

# குடிநீர் இணைப்பு வழங்கவில்லை எனக் கூறி சமூக ஆர்வலர் சிவா

## மாவட்ட ஆட்சியரிடம் மனு

தருமபுரி மே 26

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சிறப்பு பேரூராட்சி அருந்ததியர் காலணியில் கீழ்கண்ட முகவரியில் வசித்து வரும் பெருமாள் ( வயது 56) த/பெ. அப்பு 3/124/1 குடிநீர் இணைப்பு வழங்க ரூ.14,000 வைப்புத் தொகையை ஸ்டேட் பேங்க் மூலமாக 14/03/2022 அன்றுசெலுத்திஉள்ளார். ஆனால்இதுவரைபாலக்கோடு பேரூராட்சி குடிநீர் இணைப்பு வழங்காமல் அழைக்கழிப்பு செய்துள்ளனர்.

இதுபோல் 300 க்கும் மேற்பட்டோர் பணம் செலுத்தி உள்ளார்கள். பேரூராட்சி இதுவரைஎந்தநடவடிக்கையும் எடுக்கவில்லை . ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தை கடந்த ஐந்து ஆண்டுகளாக நிறுத்திவிட்டார்கள் மீண்டும் வழங்க வேண்டும்.

பேரூராட்சியில் இதற்கான மனுக்களை அளித்தும் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே இந்த மனுவை தீர விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பாலக்கோடு சமூக ஆர்வலர்கள் சிவா, செல்வம், அழகு பெருமாள், குணசேகரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அதியன் கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் சதீஷ் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சாலை வசதி, குடிநீர் வசதி, முதியோர் உதவித்தொகை, சிட்டா பட்டா பெயர் மாற்றம் ஆகிய வேண்டி ஆட்சியரிடம் பொதுமக்கள் மனுக்களை வழங்கினார்கள். மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, தனித்துணை ஆட்சியர் செல்வி, மாவட்ட வழங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் கோவிந்தன், உதவி ஆணையர் கோபு உள்ளிட்ட தொடர்புடைய அரசு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஆரல்வாய்மொழி அருகே மனைவி விபத்தில் இறந்ததால் தொழிலாளி வீட்டில் தூக்கிட்டு தற்கொலை

நாகர்கோவில், மே. 26

ஆரல்வாய்மொழி அருகே உள்ள பில்லாவிலை பகுதியை சேர்ந்தவர் சிசில் (57). தொழிலாளியான இவருடைய மனைவி வசந்தா கடந்த 8ம் தேதி நடைபெற்ற சாலை விபத்தில் உயிரிழந்தார். இந்த சம்பவத்தால் கடும் மன உளைச்சலுக்கு ஆளான சிசில் மன வேதனையில் இருந்து வந்தார். யாரிடமும் சரிவர பேசாமல் தனிமையிலே இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு வீட்டில் இருந்த சிசில் யாரும் இல்லாத நேரத்தில் திடீரென தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் தூக்கில் தொங்குவதைக் கண்ட உறவினர்கள் உடனடியாக அரல்வாய்மொழிபோலீஸ்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சிசிலின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இது தொடர்பாக அவரது மகன் யாக்கோபு என்பவர் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.